**செ.வெ.எண் :643** **நாள்: 02.10.2021**

# தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் புதூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் வல்லம்புதூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு இன்று (02.10.2021) நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது:-

தமிழக அரசு வருடத்திற்கு 4 முறை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வல்லம்புதூர் ஊராட்சியில் கிராமசபை கூட்டம் இன்று நடத்தப்பட்டது. இதன் மூலம் கிராம மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசின் செயல்பாடுகள் குறித்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும் இக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்தும், கொரோனா பெருந்தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் குறித்தும், ஊரக பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்தும் ஊட்டச்சத்து இயக்கம் குறித்தும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள் குறித்தும் தூய்மை பாரத இயக்கம் செயல்பாடுகள் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை திட்டம் குறித்தும் நெகிழிக்கு மாற்று பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்குவித்தல் குறித்தும் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் வாய்க்கால்களை சுத்தப்படுத்தும் இயக்கம் குறித்தும் அனுமதியற்ற விளம்பர பலகைகள் விளம்பர தட்டிகள் பதாகைகளை அகற்றுதல் குறித்தும் கிராம வறுமை ஒழிப்பு திட்டம் குறித்தும் பிரதம மந்திரி குடியிருப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சமூக தீமை நிராகரிப்பு உறுதிமொழி மற்றும் குழந்தை திருமணத்தை தடுத்தல் உறுதிமொழி ஆகியவை பொதுமக்கள் முன்னிலையில் எடுக்கப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் திருவையாறு சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் ஆகியோர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியிணையும் பின்னர் வல்லம் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த காய்கறி தோட்டம் பணிகளையும் பார்வையிட்டனர்.

இக்கூட்டத்தில் திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் திரு.துரை சந்திரசேகரன், முதுநிலை மண்டல மேலாளர் திருமதி.உமாமகேஸ்வரி, இணை இயக்குனர் (வேளாண்மை) திரு.ஜஸ்டின், உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) திரு.மோகன், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) திரு.பாலகணேஷ், ஊராட்சி ஒன்றியக் குழு பெருந்தலைவர் திருமதி.வைஜெயந்திமாலா கேசவன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன் மற்றும் அறிவானந்தம் ஒன்றிய குழு உறுப்பினர் திரு.ஜோதி, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சாரதா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**